**நன்றிப்பாடல்**

நீ செய்த நன்மை நினைக்கின்றேன் - என்
நெஞ்சுருக நன்றி சொல்கின்றேன்
இறைவா - 4 (2)

உண்டிட உணவும் உடையுமே கொடுத்து
ஒரு குறையின்றிக் காத்து வந்தாய் (2) - ஓர்
அன்னையைப் போலவே அன்பினைப் பொழிந்து
அல்லல்கள் யாவையும் தீர்த்து வைத்தாய் - 2

மலருக்குப் பதிலாய் களையெங்கும் தோன்றி
மனதினை நிரப்புதல் பார்த்திருந்தாய் (2)- உடன்
உலரட்டும் என்றே ஒதுக்கிவிடாமல்
களைகளை அகற்றிக் காத்திருந்தாய் - 2

**மரியன்னைப்பாடல்**

ஜென்மப் பாவம் இல்லாமலே
உற்பவித்த ராக்கினியே (2)
நாங்களெல்லாம் உம் பாதத்தை
நாடி வந்தோம் நாயகியே
மரியே மரியே ஆதரிப்பாய் தோத்திரமே

பேய்மயக்கும் பாவவழி நின்று எம்மைக் காத்திடுவாய் -2
தூய வெள்ளி மலர்போல் தோன்றி நீயே பூமிதனில்
மரியே மரியே ஆதரிப்பாய் தோத்திரமே

மணிமுடி தாங்கி நிற்கும் மகிமையின் அரசியே -2
வானவரும் மானிடரும் வாழ்த்தி
உம்மைப் போற்றுகிறோம்
மரியே மரியே ஆதரிப்பாய் தோத்திரமே

| |
|---|
| இப் பாடல்களின் ஒலி வடிவத்தை எம்து இணையத்தளமாகிய **www.tamilcatholicnews.com** மூலம் கேட்கலாம் |
| |

# மாதாந்த திருப்பலிப் பாடல்கள்

**ஏப்பிரல் 2022**

**வருகைப்பாடல்**

இறைவனின் பலியில் இணைந்திட வருவோம்
இறைவன் அழைக்கின்றார் இனிதே அழைக்கின்றார் (2)
துன்பம் இல்லை துயரம் இல்லை
இறைவனின் உறவினிலே
வாழ்வுண்டு வழியுண்டு இறைவனின் துணையினிலே

1. அடிமைத் தளையிலிருந்து அன்று
முன்னோரை மீட்ட தேவன் -2
பாவத் தளையிலிருந்து நம்மை மீட்கவே அழைக்கின்றார்
துன்பம் இல்லை.....

2. அடிமை என்றழைக்கவில்லை நம்மை
நண்பர்கள் என்றாரே - 2
உரிமை வாழ்வு வழங்க நம்மை பெயர் சொல்லி அழைக்கின்றார்
துன்பம் இல்லை.... .

**தியானப்பாடல்கள்**

சந்திப்பு நிகழுதம்மா தாயின் சந்திப்பு
நிகழுதம்மா - 2
கல்வாரி செல்லும் பாதையிலே கழுமரம்
சுமந்த பார்வையிலே

குழந்தையின் துன்பம் கண்டு கலங்காத
அன்னையில்லை -2
ஆறுதல் சொல்வதற்கோ வார்த்தைகள்
ஏதுமில்லை
அன்னையின் பார்வையில்
நம்பிக்கை தீபம்
இயேசுவின் நெஞ்சினில்
வலிமையின் வேதம் -2

வாழ்வினில் துன்பம் கண்டு துவளாத
நெஞ்சமில்லை 2
ஆறுதல் கிடைத்தாலும் உள்ளங்கள்
தெளிவதில்லை
அன்னையின் பார்வையில்
நம்பிக்கை தீபம்
அவளது சந்திப்பில்
வலிமையின் வேதம் - 2

**காணிக்கைப் பாடல்**

அடியோர் யாம் தரும் காணிக்கையை
அன்பாய் ஏற்பாய் ஆண்டவரே (2)

பாவியென்றெம்மைப் பாராமல்
பாவத்தின் தீமையை அடையாமல் (2)
பரிகாரம் என ஏற்றிடுவாய்
பலியாய் எமை நீ மாற்றிடுவாய்

வாழ்வுக்கு ஒருநாள் முடிவு உண்டு -
விண்
வாழ்வுக்கு எமக்கென்று எது உண்டு (2)
என் மனம் அறிந்ததன் பயன் என்னவோ
எல்லாம் அறிந்தவர் நீரல்லவோ

**திருவிருந்துப்பாடல்**

கல்மனம் கரைய கண்களும் பனிக்க
கைகளைக் குவித்தேன் இறைவா
என் மனம் வருவாய் இறைவா (2)

என்னகம் புகுந்து இதயத்தில் அமர்ந்து
பொன்னகம் புனைவாய் இறைவா (2)
அங்கு
புன்மைகள் மறைந்து நன்மைகள்
நிறைய
இன்னருள் தருவாய் இறைவா -2
பாசத்தைக் களைந்து பாவத்தை விலக்க

பாதத்தைப் பிடித்தேன் இறைவா (2)
துயர்
வீசிடும் புயலும் வெகுண்டெழும்
அலையும்
அமைந்திடப் பணிப்பாய் இறைவா -2

நான் எனும் அகந்தை நரகத்தை அழித்து
நல்லுலகமைப்போம் இறைவா (2) அங்கு
பூவெனும் இதய பீடத்தில் எனையே
பலியாய் அளிப்பேன் இறைவா